# சங்குப் பூ

------------------------------------

கான்கிரீட் வனாந்தரத்தில் முளைத்த
எனது பதினைந்தாவது மாடி பால்கனியில்
ஒரு சங்குப்பூ.
சங்க காலத்துக் குன்றின் மேல் பூத்த
குறிஞ்சிக் கருவிளைப் பூவின்
ரத்தக் கோட்டை இழுத்துக் கொண்டு
இன்று என் பிளாஸ்டிக் தொட்டியில் பூக்கிறது.
இரவெல்லாம் பெய்த மழைச்சாரலில் நனைந்து
வெதுவெதுப்பான காலை இளம் வெயிலைப் பருகி
மணிநீல இதழ் விரித்து
என்னைப் பார்த்துச் சிரிக்கிறது கருவிளை.
நல்ல யாழ் மருப்பின் மெல்ல வாங்கி
பாணன் பறித்துப் பாடினியிடம் வியந்த
கருவிளை மலரின் பெயரை
நிரை நிரை எனும் ஈரசைச் சீருக்குச்
சூட்டி மகிழ்கிறான் புலவன்.
காலம் ,வெளி கடக்கும் ரஸவாதம் கற்று
பிரபஞ்சத்தின் மூலையில் ஒரு ராஜகுமாரியாய்
ஒரு தமிழ்த் தொன்மவியல் கதாபாத்திரமாய்க்
காற்றில் அசைந்தாடுகிறது சங்குப்பூ.
நான் மௌனமாய் அதன் முன் அமர்ந்திருக்கிறேன்
ஈராயிரம் ஆண்டின் உரையாடலை செவிமடுத்தபடி.

16 டிசம்பர் 2020

